නීතිපති දෙපාර්තමේන්තුව

சட்டமா அதிபதி திணைக்களம்

Attorney General's Department



# කාර්ය සාධන වාර්තාව - 2018

# Performance Report - 2018

# செயலாற்றுகை அறிக்கை - 2018

## உள்ளடக்கம் பக்க எண்


1. சட்டமா அதிபர் திணைக்களத்தின் பின்னணி 3

2. சட்டமா அதிபர் திணைக்களத்தின் நிறுவன கட்டமைப்பு 4

3. பதவியணி விபரம் 5

4. சட்டமா அதிபர் திணைக்களத்தின் செயற்பாடுகள் 6

I. குற்றவியல் வழக்கு பிரிவு
II. சிவில் பிரிவு
III. அரச சட்டதரணிகள் பிரிவு
IV. உயர் நீதிமன்ற பிரிவு
V. கூட்டுத்தாபனப் பிரிவு
VI. சிறுவர் துஷ்பிரயோக வழக்குப் பிரிவு
VII. பொதுமக்கள் மனுப் பிரிவு 7-22

- வழக்குப் பிரிவுகளின் செயல் நிறைவேற்றம் தொடர்பான சுருக்கம் 16

VIII. தாபனப் பிரிவு 17-19

IX. திட்டமிடல் பிரிவு 20
X. கணக்குகள் பிரிவு 21

## நோக்கு

- இலங்கை அரச சேவையின் முதன்மைச் சேவையாக விளங்குவதுடன் இலங்கையினதும் அதன் மக்களினதும் நலனைக் கருத்திற் கொண்டு நீதிநெறியினை வினைத்திறனுடன் வழங்குதல்.

## குறிக்கோள்

- இலங்கை அரசாங்க மற்றும் அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளுக்கு நிபுணத்துவ சட்ட சேவைகளையும் மதியுரைகளையும் வழங்கி அரசாங்கத்தின் பரந்துபட்ட குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துவதில் முக்கிய பங்கை வகித்தல்.

## செயல் நோக்கு

- இலங்கை மக்களுக்கு மிகச் சிறப்பான முறையில் சேவை செய்வதுடன் இலங்கையின் வாக்குறுதியினை நிறைவேற்றுவதில் நன்மதிப்புடனும் கண்ணியத்துடனும் ஒருமைப்பாட்டுடனும் செயலாற்றுதல்.

- சமூக மற்றும் பொருளாதார மேம்பாடு, சம வாய்ப்பு மற்றும் சகிப்புத்தன்மை என்பவற்றை ஊக்குவிக்கும் பொருட்டு இலங்கை மக்களின் நீதி, பாதுகாப்பு மற்றும் சுதந்திரத்தை உறுதி செய்து நேர்மையான மற்றும் சுதந்திரமான முறையில் இலங்கையில் சட்டத்தை அமுல்படுத்துவதற்காக சட்டமா அதிபர் திணைக்களம் காத்திரமான முறையில் செயற்படும்.

## சட்டமா அதிபர் திணைக்களம்
## (த.பெட்டி இல : 502, கொழும்பு 12.)


### 1. பின்னணி

சட்டமா அதிபர், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு சார்பாக தோன்றும் தலைமைச் சட்ட அலுவலர் என்பதுடன் திணைக்களத்தின் தலைவராகவும் பொறுப்புக் கூறும் உத்தியோகத்தராகவும் கடமையாற்றுகின்றார். சட்டமா அதிபர் திணைக்களமானது “ஏ” வகுப்பு திணைக்களம் என்பதுடன் நீதி அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் வருகின்றது.

சட்டமா அதிபர் திணைக்களமானது, மத்திய அரசு, மாகாண சபைகள், அரச திணைக்களங்கள், நியதிச் சட்டச் சபைகள் மற்றும் அரை அரச நிறுவனங்களுக்கு சட்ட உதவியை வழங்கி வருகின்றது. திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தர்கள், சிவில், குற்றவியல், அரசியலமைப்பு மற்றும் வர்த்தக விடயங்களில் அரச மற்றும் அரச சார்பான நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் இலங்கையிலுள்ள உயர்நீதிமன்றம், ஏனைய நீதிமன்றங்கள், தொழில் நியாய சபைகள் என்பவற்றில் தொடரப்பட்ட வழக்குகளில் அரசாங்கம் மற்றும் அரச நிறுவனங்கள் சார்பாகத் தோன்றுவர்.

சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகளுக்காக திணைக்களத்தில் முறையே சிவில் பிரிவு குற்றவியல் பிரிவு மற்றும் அரச சட்டத்தரணிகள் பிரிவு ஆகிய மூன்று அலகுகள் தாபிக்கப்பட்டுள்ளதுடன் (திணைக்களத்தில் சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகள் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன்) நிருவாக செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தாபனப் பிரிவும் கணக்குப் பிரிவும் தாபிக்கப்பட்டுள்ளன. இவ் அலகுகளுக்கு மேலதிகமாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் செயற்பாடுகள் முறையாக நடைபெறுவதற்கு கூட்டுத்தாபனப் பிரிவு, அவசரகால சட்டம் மற்றும் பயங்கரவாத தடுப்பு சட்டத்தில் கீழ் தொடரப்படும் வழக்குகள் சம்பந்தமாக தொழிற்படும் ஈஈஆர் பிரிவு, சிறுவர் துஷ்பிரயோக வழக்குப் பிரிவு, குடிவரவு மற்றும் குடியகல்வுப் பிரிவு, பொதுமக்கள் மனுப் பிரிவு மற்றும் உயர்நீதிமன்ற பிரிவு, ஆகியனவும் தாபிக்கப்பட்டுள்ளன.

## 2.சட்டமா அதிபா திணைக்களத்தின் நிருவாக கட்டமைப்பு.



## 3. 2018.12.31 இலுள்ளவாறான பதவியணி தொடர்பான தகவல்

| ஊழியர் வகையீட்டு மட்டம் | பதவிப் பெயர் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போதைய பதவியணி | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | சட்டமா அதிபர் | 1 | 1 | - |
| | மன்றாடியார் அதிபதி | 1 | 1 | - |
| | சிரேஷ்ட மேலதிக மன்றாடியார் அதிபதி | 2 | 2 | - |
| | மேலதிக மன்றாடியார் அதிபதி | 9 | 9 | - |
| | சிரேஷ்ட பிரதி மன்றாடியார் அதிபதி | 9 | 9 | - |
| | பிரதி மன்றாடியார் அதிபதி | 19 | 14 | 5 |
| | சிரேஷ்ட அரச சட்டவாதி | 56 | 27 | 29 |
| | அரச சட்டவாதி | 218 | 153 | 65 |
| | உதவி அரச சட்டவாதி (தகுதிகாண்) | 130 | 8 | 122 |
| | சிரேஷ்ட அரச சட்டத்தரணி | 1 | 1 | - |
| | அரச சட்டத்தரணி | 2 | 1 | 1 |
| | சிரேஷ்ட உதவி அரச சட்டத்தரணி | 6 | 6 | - |
| | உதவி அரச சட்டத்தரணி | 18 | 6 | 12 |
| | கனிஷ்ட உதவி அரச சட்டத்தரணி | 28 | 12 | 16 |
| | பிரதம கணக்காய்வாளர் | 1 | 1 | - |
| | பிரதான உள்ளக கணக்காய்வாளர் | 1 | 1 | - |
| | உதவி/பிரதி/பணிப்பாளர் (நிர்வாகம்) | 1 | - | 1 |
| மூன்றாம் நிலை | நிருவாக உத்தியோகத்தர் | 3 | 2 | 1 |
| | நூலகர் (சுப்ரா) | 1 | 1 | - |
| | மொழிபெயர்ப்பாளர் | 8 | 7 | 1 |
| | புள்ளிவிபர உத்தியோகத்தர் | 1 | 1 | - |
| இரண்டாம் நிலை | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 3 | 2 | 1 |
| | நூலகர் (I,II) | 2 | - | 2 |
| | நுலகர் (III) | 2 | 2 | - |
| | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 5 | - | 5 |
| | பொது முகாமைத்துவ உதவியாளர் | 180 | 159 | 21 |
| | ஒருங்கிணைப்புச் செயலாளர் | 1 | 1 | - |
| | பிரத்தியேகச் செயலாளர் | 1 | 1 | - |
| | சுருக்கெழுத்தாளர் | 78 | 1 | 77 |

| | | | | |
|---|---|---|---|---|
| | திணைக்கள இலிகிதர்கள் | 25 | 24 | - |
| ஆரம்ப நிலை | சாரதி | 137 | 89 | 48 |
| | அலுவலக உதவியாளர் | 239 | 210 | 29 |
| | திணைக்கள அலுவலக உதவியாளர்கள் | 20 | 20 | - |
| | காவலாளி | 7 | 3 | 4 |
| | பராமரிப்பு உதவியாளர் | 2 | - | 2 |
| மொத்தம் | | 1218 | 775 | 443 |

குறிப்பு : வரவு செலவுத்திட்ட உதவியாளர் பதவியானது அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவைக்கு உள்வாங்கப்பட்டுள்ளது.

## 4. <u>சட்டமா அதிபர் திணைக்களத்தின் செயற்பாடுகள்</u>

சட்டமா அதிபர் திணைக்களத்தின் கடமைகளை பின்வருமாறு சுருக்கமாக கூறலாம்.

- சிவில், குற்றவியல், அரசியலமைப்புச் சட்டம், வர்த்தகம் போன்ற விடயங்கள், சர்வதேச சட்ட நடவடிக்கைகள் மற்றும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பான விடயங்கள் என்பன தொடர்பாக அரசாங்கத்திற்கும் அரச நிறுவனங்களுக்கும் அறிவுறுத்தல்களினை வழங்குதல்.
- உயர் நீதிமன்றம், ஏனைய நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நியாய சபைகளில் தொடரப்பட்ட வழக்குகளில் அரசாங்க மற்றும் அரச நிறுவனங்கள் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தல்.
- புதிய சட்டங்களை சட்டவாக்கம் செய்யும் போதும் நடைமுறையிலுள்ள சட்டங்களைத் திருத்தும் போதும் தேவையான சட்ட ஆலோசனைகளை வழங்குதல்.

சட்ட உத்தியோகத்தர்கள் மேற்கூறப்பட்ட கடமைகளை மேற்கொள்வதற்கு திணைக்களத்தின் பின்வரும் பிரிவுகள் உதவுகின்றன.

- ➢ குற்றவியல் பிரிவு
- ➢ சிவில் பிரிவு
- ➢ அரச சட்டத்தரணிகள் பிரிவு
- ➢ உயர் நீதிமன்றப் பிரிவு
- ➢ கூட்டுத்தாபனப் பிரிவு

மேலும் திணைக்களத்தின் தங்குதடையின்றிய செயற்பாடுகளுக்கு சிறப்பாக இணங்காணப்பட்ட பொறுப்புக்களையுடைய சிறப்புப் பிரிவுகள் உள்ளன.

- பொதுமக்கள் மனு அலகு (இப்பிரிவு மக்கள் மனுக்கள் தொடர்பில் வழக்குகளை கையாளும்)
- சிறுவர் துஷ்பிரயோக வழக்குப் பிரிவு (இப்பிரிவு, சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்குகளைக் கையாள்வதற்கு தாபிக்கப்பட்டுள்ளது)

மேற்கூறப்பட்ட பிரிவுகளும் அலகுகளும் சட்டமா அதிபர் திணைக்களத்தில் முக்கிய செயற்பாடுகளை கையாளுகின்றன. அத்துடன் இத்திணைக்களத்தின் நிருவாக நடவடிக்கைகளுக்காக கணக்குப் பிரிவும் தாபனப் பிரிவும் தாபிக்கப்பட்டுள்ளன.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஒவ்வொரு பிரிவினதும் செயற்பாடுகளை பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்.

## i. குற்றவியல் பிரிவு

இப்பிரிவிற்கு, உயர்நீதிமன்றம் அல்லது நீதவான் நீதிமன்றங்களில் குற்றவியல் வழக்கு தொடர்வதற்கும் மற்றும் ஆலோசனைக்கும் நீதவான் நீதிமன்றத்திலிருந்தோ அல்லது பொலிஸ் திணைக்களத்திலிருந்தோ நேரடியாக பெருமளவிலான குற்றவியல் வழக்குகள் கிடைக்கப் பெறுகின்றன.

மேற்கூறப்பட்ட வழக்குகளின் பிரதிகள் கிடைக்கப் பெற்றதும் சட்டமா அதிபர் திணைக்களத்தில் கோவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டு 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இந்த செயற்பாட்டில் சந்தேக நபருக்கு எதிராக நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தொடரவோ அல்லது சாட்சியங்கள் தேவையான அளவு இல்லாத போது சந்தேக நபரை சட்ட நடவடிக்கைகளில் இருந்தும் விடுதலை செய்யவோ அல்லது மேல் நீதிமன்றங்களுக்கு நேரடியாகவே குற்றப்பகர்வுப் பத்திரங்கள் அனுப்பிவைக்கப்படும். குற்றவியல் பிரிவில் 125 உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டுள்ளதுடன், இலங்கையிலுள்ள ஒவ்வொரு மேல் நீதிமன்றத்திலும் குற்றவியல் பிரிவிலுள்ள உத்தியோகத்தர் ஒருவர் இணைக்கப்பட்டுள்ளார்.

**குற்றங்களின் தன்மைக்கு ஏற்ப வகைப்படுத்தப்பட்ட விடயங்கள்**

| | | |
|---|---|---|
| CR1 | - | குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தினால் புலனாய்வு செய்யப்பட்ட வழக்குகள். |
| CR2 | - | தேர்தல் தொடர்பான குற்றங்களும் கொழும்பு மோசடி விசாரனையை பணியகத்தினால் பிரசாரபடுக்கப்படும் வழக்கெல் |
| CR3 | - | அபாய ஔடத குற்றங்கள் |
| CR4 | - | கடன் அட்டை தொடர்பான குற்றங்கள் |
| OW | - | தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் சட்டத்தின் கீழான குற்றங்கள் |
| EER/TR | - | அவசரகால ஒழுங்குவிதிகள் சட்டத்தின் கீழான குற்றங்கள் |
| AG/T | - | பொலிஸ் கட்டுக்காவலின் போது சித்திரவதை |
| I&E | - | குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டத்தின் கீழான குற்றங்கள் |
| MTA | - | மரணத்தை விளைவித்த விபத்துகள் தொடர்பான வழக்குகள் |

**மாகாண அடிப்படையில் வகுக்கப்பட்ட விடயங்கள் பழைய வகுப்பீடு.**

(2010.12.31ஆம் திகதி வரையில் திறக்கப்பட்ட கோப்புகள்
CM1, CM2, CM3, CW1, CW2, CW3, CW4, CB1, CB2, CS1, CS2, CN

திணைக்களத்தின் வினைத்திறனான செயற்பாட்டிற்கும் மாகாண மட்டத்தில் கோப்புக்களை அடையாளம் காண்பதை உறுதி செய்வதற்கும் 2011.01.01 ஆம் திகதி முதல் கீழே குறிப்பிட்டுள்ளவாறு குற்றவியல் கோப்புக்கள் புதிய முறையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

EP1, EP2, EP3, EP4, NP1, NP2, NP3, NP4, NCP1, NCP2, SP1, SP2, SP3, SP4, SP5, CP1, CP2, CP3, NWP1, NWP2, NWP3, NWP4, UP1, UP2, SGP1, SGP2, SGP3, WP1, WP2, WP3, WP4, WP5, WP6, MLA

<u>குற்றவியல் பிரிவின் செயலாற்றுகை அறிக்கை</u>

<u>முன்னேற்ற அறிக்கை - குற்றவியல் பிரிவு (2018.01.01 முதல் 2018.12.31 வரை)</u>

| தொடர் இல | விடயம் | 2018.01.01 திகதிக்கு எஞ்சியிருந்த கோப்புக்கள் | திறக்கப்பட்ட கோவைகள் | குற்றப்பகர்வு செய்யப்பட்ட கோப்புக்கள் | அறிவுறுத்தல் வழங்கப்பட்ட கோப்புக்கள் | முடிவுற்ற கோப்புக்கள் | ஏனையவை | எஞ்சியிருக்கும் கோப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | **CW3** | 81 | 0 | 2 | 2 | 6 | 0 | 71 |
| 2 | **CW4** | 34 | 0 | 0 | 0 | 1 | 0 | 33 |
| 3 | **SGP1** | 275 | 152 | 48 | 14 | 5 | 0 | 359 |
| 4 | **SGP2** | 155 | 21 | 20 | 14 | 7 | 0 | 134 |
| 5 | **SGP3** | 203 | 52 | 40 | 18 | 5 | 0 | 192 |
| 6 | **CR1** | 1894 | 290 | 140 | 61 | 10 | 4 | 1969 |
| 7 | **CR2** | 556 | 54 | 1 | 58 | 2 | 5 | 544 |
| 8 | **CR3** | 1595 | 828 | 956 | 91 | 17 | 0 | 1192 |
| 9 | **CR4** | 114 | 4 | 6 | 1 | 0 | 0 | 111 |
| 10 | **NWP1** | 465 | 80 | 72 | 18 | 14 | 0 | 441 |
| 11 | **NWP2** | 193 | 43 | 35 | 5 | 5 | 0 | 191 |
| 12 | **NWP3** | 121 | 29 | 20 | 3 | 0 | 0 | 127 |
| 13 | **NWP4** | 127 | 18 | 28 | 8 | 7 | 0 | 102 |
| 14 | **OW** | 309 | 68 | 136 | 10 | 17 | 1 | 213 |
| 15 | **AG/T** | 54 | 9 | 2 | 0 | 0 | 0 | 61 |
| 16 | **CS1** | 93 | 0 | 9 | 4 | 8 | 0 | 72 |
| 17 | **SP1** | 274 | 73 | 40 | 11 | 4 | 0 | 292 |
| 18 | **SP2** | 319 | 53 | 45 | 18 | 10 | 0 | 299 |
| 19 | **CS2** | 106 | 0 | 5 | 4 | 0 | 1 | 96 |
| 20 | **SP3** | 255 | 70 | 39 | 8 | 5 | 0 | 273 |
| 21 | **SP4** | 159 | 56 | 28 | 7 | 4 | 0 | 176 |
| 22 | **SP5** | 155 | 39 | 30 | 5 | 3 | 0 | 156 |
| 23 | **I & E** | 797 | 147 | 12 | 105 | 20 | 0 | 807 |
| 24 | **EER** | 31 | 19 | 4 | 1 | 1 | 0 | 44 |
| 25 | **TR** | 5 | 5 | 0 | 0 | 0 | 0 | 10 |
| 26 | **MTA** | 77 | 29 | 2 | 11 | 0 | 0 | 93 |
| 27 | **CR7** | 0 | 25 | 0 | 0 | 0 | 0 | 25 |

| தொடர் இலக்கம் | விடயம் | 2017.01.01 திகதிக்கு எஞ்சியிருந்த கோப்புக்கள் | திறக்கப்பட்ட கோவைகள | குற்றப்பகர்வு செய்யப்பட்ட கோப்புக்கள | அறிவுறுத்தல் வழங்கப்பட்ட கோப்புக்கள் | முடிவுற்ற கோப்புக்கள் | ஏனையவை | எஞ்சியிருக்கும் கோப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | **CN** | 20 | 0 | 2 | 1 | 0 | 0 | 17 |
| 2 | **EP1** | 157 | 25 | 27 | 13 | 5 | 0 | 137 |
| 3 | **EP2** | 130 | 26 | 15 | 8 | 2 | 0 | 131 |
| 4 | **EP3** | 92 | 33 | 18 | 6 | 0 | 0 | 101 |
| 5 | **EP4** | 91 | 27 | 13 | 10 | 2 | 1 | 92 |
| 6 | **NP1** | 168 | 53 | 39 | 15 | 3 | 4 | 160 |
| 7 | **NP2** | 140 | 19 | 30 | 10 | 1 | 0 | 118 |
| 8 | **NP3** | 41 | 25 | 22 | 1 | 1 | 0 | 42 |
| 9 | **NP4** | 59 | 15 | 15 | 7 | 1 | 1 | 50 |
| 10 | **CM1** | 98 | 0 | 7 | 3 | 1 | 0 | 87 |
| 11 | **NCP1** | 383 | 100 | 40 | 17 | 10 | 1 | 415 |
| 12 | **NCP2** | 164 | 36 | 22 | 4 | 1 | 0 | 173 |
| 13 | **CM2** | 57 | 0 | 6 | 1 | 1 | 0 | 49 |
| 14 | **CP1** | 346 | 163 | 63 | 35 | 11 | 3 | 397 |
| 15 | **CP2** | 86 | 22 | 15 | 10 | 2 | 0 | 81 |
| 16 | **CP3** | 150 | 59 | 31 | 9 | 5 | 1 | 163 |
| 17 | **CM3** | 91 | 0 | 6 | 2 | 1 | 0 | 82 |
| 18 | **UP1** | 297 | 61 | 41 | 16 | 4 | 0 | 297 |
| 19 | **UP2** | 188 | 47 | 17 | 12 | 4 | 0 | 202 |
| 20 | **CB1** | 34 | 0 | 1 | 4 | 0 | 0 | 29 |
| 21 | **CB2** | 57 | 0 | 5 | 1 | 1 | 0 | 50 |
| 22 | **WP1** | 977 | 178 | 132 | 99 | 16 | 2 | 894 |
| 23 | **CW1** | 51 | 0 | 6 | 1 | 3 | 0 | 41 |
| 24 | **WP5** | 236 | 60 | 21 | 18 | 3 | 0 | 240 |
| 25 | **WP6** | 459 | 47 | 42 | 31 | 5 | 2 | 425 |
| 26 | **CR5** | 94 | 26 | 3 | 8 | 2 | 4 | 103 |
| 27 | **CW1** | 86 | 0 | 7 | 4 | 5 | 0 | 70 |
| 28 | **WP2** | 188 | 37 | 54 | 14 | 1 | 0 | 156 |
| 29 | **WP3** | 337 | 100 | 91 | 30 | 8 | 0 | 308 |
| 30 | **WP4** | 356 | 76 | 21 | 21 | 3 | 0 | 376 |
| 31 | **WP7** | 0 | 26 | 12 | 2 | 0 | 0 | 12 |

## ii <u>சிவில் பிரிவு</u>

இலங்கையின் உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றம் என்பவற்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேன் முறையீடுகள், ரிட் ஆணைகள், மீள் நோக்குகை வழக்குகள், நாட்டின் பல்வேறு மாவட்ட நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படும் சிவில் வழக்குகள் என்பன உட்பட அனைத்து சிவில் மற்றும் வர்த்தக வழக்குகள் என்பன தொடர்பில் சிவில் பிரிவு பங்கேற்கும் சட்டங்களைத் திருத்துதல், புதிய சட்டங்களை அங்கீகரித்தல் போன்ற பணிகள் தொடர்பில் அறிவுரைகள் வழங்கலும் மேற்கொள்ளப்படுதலும் பாராளுமன்றத்தில் குறித்த நடவடிக்கைகளில் கலந்துகொண்டு அலோசனை வழங்கபடும். அரச திணைக்களங்களுக்கு அறிவுரைகள் வழங்குதல், வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கான அறிவுரைகள் வழங்குதல், மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வினவப்படுகின்ற விடயங்கள், வழக்குத் தொடரும் அறிவிப்புக்கள் தொடர்பான வழக்குகள், நடுத்தீர்ப்பு வழக்குகள், காணிச் சுவீகரிப்பு வழக்குகள், அரச காணிகளின் உரிமையைப் பெறுவது தொடர்பான வழக்குகள் ஆகியன சிவில் பிரிவின் உத்தியோகத்தரினால் கையாளப்படும் வழக்கு நடவடிக்கைகளில் சிலவாகும்.

மேன்முறையீட்டு நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றங்கள், மாகாண சிவில் மேன் முறையீட்டு மேல் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நியாய சபையிலுள்ள சிவில் விடயங்களை கையாள்வதற்கு சிவில் பிரிவில் 126 உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் வேலைக்கு மேலதிகமாக, இவ் உத்தியோகத்தர்கள் சட்டப் பிரச்சனைகளில் அரச திணைக்களங்களுக்கு ஆலோசனை வழங்குதல், பல்வேறு தொழில் நுட்பக் குழுக்களில் பங்கேற்றல், உள்ளூர் மற்றும் சர்வதேச நடுத்தீர்ப்புகளுக்கு தோன்றுதல், மற்றும் சர்வதேச தவறு செய்கின்ற சட்டவல்லுறவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட ஒழுக்காற்று விடயங்களில் உயர்நீதிமன்றில் தோன்றுதல் போன்ற விடயங்களிலும் ஈடுபடுகின்றனர்.

**சிவில் பிரிவில் வகுப்பீடு செய்யப்பட்ட விடயங்கள்**

| | | |
|---|---|---|
| E | - | சட்ட ஆலோசனை |
| FC | - | வெளிநாட்டு கடன்கள் பெறுவதற்கான ஆலோசனை |
| CA/SC | - | உயர்நீதிமன்ற வழக்குகள் |
| CA/CA | - | மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள் |
| CA/HC | - | மேல் நீதிமன்ற வழக்குகள் |
| HRC | - | மனித உரிமைகள் ஆணைக்குழு விடயங்கள் |
| B | - | சட்டமூலங்கள் |
| CA/NA | - | வழக்கறிவித்தல் |
| CA/DC | - | மாவட்ட நீதிமன்ற வழக்குகள் |
| ARB | - | நடுத்தீர்ப்பு வழக்குகள் |
| C | - | அரசுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் (அரசுக்கு மீளளிப்பு) |
| CL | - | போட்டித்தன்மை வாய்ந்த உடன்படிக்கை தொடர்பான அறிவுரை |
| CE | - | அரச காணிகளின் உரிமையை மீளப்பெறல் |
| AA | - | ஒழுக்காற்று விடயங்கள் |
| AV | - | விமான சேவைகள் வழக்குகள் |
| CA/LT | - | தொழில் நியாய சபை வழக்குகள் |
| CA/MC | - | நீதவான் நீதிமன்ற வழக்குகள் |

**சிவில் பிரிவின் செயற்பாடு**

| **விடயம்** | **திறக்கப்பட்ட வழக்குகள்** | **முடிவுறுத்தப்படட வழக்குகள்** | **எஞ்சியிருக்கும் கோப்புக்கள்** |
|---|---|---|---|
| E | 482 | 266 | 216 |
| FC | 31 | 12 | 19 |
| CL | 173 | 172 | 1 |
| C | 195 | 89 | 106 |
| CE | 12 | 4 | 8 |
| B | 77 | 44 | 33 |
| CA/SC | 142 | இத்தகைய கோவைகள் தொடர்பான எதிர்கால விடயங்கள் அரச சட்டவாதிகள் பிரிவினால் மேற்கொள்ளப்படும் | |
| CA/CA | 447 | | |
| CA/HC | 385 | | |
| CA/DC | 470 | | |
| CA/NA | 382 | | |
| CA/MC | 40 | 9 | 31 |
| CE/MC | 34 | 13 | 21 |
| CA/LT | 5 | 1 | 4 |
| ARB | 8 | 1 | 7 |
| HRC | 2 | 0 | 2 |
| AA | 5 | 1 | 4 |
| **மொத்தம்** | **2890** | **612** | **452** |

- சிவில் பிரிவினால் திறக்கப்பட்ட கோவைகளின் பெரும் எண்ணிக்கையான கோவைகள் அரச சட்டத்தரணிகள் பிரிவினால் கையாளப்படுகின்றது என்பதனை கவனித்தில் கொள்ளவும்.

## iii. அரச சட்டத்தரணிகள் பிரிவு

அரச சட்டத்தரணிகள் பிரிவிற்கு சிவில் பிரிவினால் திறக்கப்பட்ட வழக்குக் கோவைகள் கிடைக்கப் பெறும் அதன் பின்னர் இலங்கை முழுவதுமுள்ள சிவில் நீதிமன்றங்களில் இவர்கள் தோன்றுவர்.

அரச சட்டத்தரணிகள் இருவர் அடங்கலாக 26 உத்தியோகத்தர்கள் அரச சட்டத்தரணி பிரிவில் உள்ளனர். இதற்கு மேலதிகமாக சிவில் வழக்குகளில் நெறிப்படுத்தல் வேலைகளை மேற்கொள்வதற்கு இலங்கை முழுவதுமான

வலையமைப்பு அரச சட்டத்தரணிகள் (முன்னர் முடிக்குரிய வழக்கறிஞர்கள்) உள்ளனர்.

இப்பிரிவானது வருடாந்தம் பெரும் எண்ணிக்கையிலான வழக்குகளை கையாளுக்கின்றது. இந்த வருடம் 4137 சிவில் வழக்குகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.

## iv. உயர் நீதிமன்றப் பிரிவு

இது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் உயர் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்குகளை மட்டும் கையாள்வதற்கான ஒரு சிறப்புப் பிரிவாகும். மேலதிக மன்றாடியார் அதிபதியின் தலைமையின் கீழ் 11 உத்தியோகத்தர்களும் மற்றும் ஏனைய வகுப்பிலுள்ளோரும் கடமையாற்றுகின்றனர்.

இப்பிரிவானது 2018 ஆம் ஆண்டில் அடிப்படை உரிமைகள் அடங்கலாக பெரும் எண்ணிக்கையான வழக்குகளை கையாண்டுள்ளது.

2018 ஆம் ஆண்டில் 847 வழக்குக் கோவைகள் திறக்கப்பட்டதுடன் அக் கோவைகளின் 498 வழக்குகள் இவ் வருடத்தில் முடிவுறுத்தப்பட்டுள்ளன.

## v. கூட்டுத்தாபனப் பிரிவு

அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் பல்வேறுபட்ட அரச சார்பான நிறுவனங்கள் என்பவற்றுக்கு அவர்களின் சட்டவிடயங்கள் தொடர்பில் நியாயமான கட்டங்களை அரவிட்டு உதவி செய்யும் நோக்குடன் இப்பிரிவானது 1990 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது.

2018 ஆம் ஆண்டில் 2088 வழக்குக் கோவைகள் திறக்கப்பட்டு 2365 வழக்குகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.

**கூட்டுத்தாபனப் பிரிவில் வகையீடு செய்யப்பட்டுள்ள விடயங்கள்**

CA - அரச நிறுவனங்கள் எதிராளி அல்லது எதிர்வாதியாக உள்ள வழக்குகள்.

C - அரச நிறுவனங்கள் வழக்காளி அல்லது மேன்முறையீட்டாளராக உள்ள வழக்குகள்.

E - அறிவுரைக்கான கோவைகள்

BCL - உடன்படிக்கைகள்

ARB - நடுத்தீர்ப்பு

SPC - மாகாணச் சபை நியதிச் சட்டங்கள்

L - காணி சுவீகரிப்பு விடயங்கள்

WB - நீர் விநியோக சிட்டைகளில் கொடுப்பனவு செய்யாதவற்றை மீள பெறுவதற்கான வழக்குகள்.

**கூட்டுத்தாபனப் பிரிவின் செயற்பாடு**

| விடயம் | திறக்கப்பட்ட கோவைகள் | முடிவுறத்தப்பட்ட கோவைகள் | எஞ்சியிருக்கும் கோப்புக்கள் |
|---|---|---|---|
| **CA** | - | 850 | 1305 |
| **C** | - | 597 | 1917 |
| **E** | - | 276 | 293 |
| **BCL** | - | 14 | - |
| **ARB** | - | 16 | 10 |
| **FC** | 2 | 4 | 3 |
| **SPC** | 4 | 6 | 6 |
| **L** | 2 | 9 | 22 |
| **WB** | - | 1 | 10 |
| **BLA** | 217 | 203 | 743 |
| **E** | 268 | 198 | 70 |
| **CA/SC** | 213 | 7 | 206 |
| **CA/CA** | 218 | 11 | 207 |
| **CA/HC** | 273 | 12 | 261 |
| **CA/DC** | 268 | 4 | 264 |
| **CA/MC** | 3 | 3 | 0 |
| **CA/LT** | 143 | 10 | 133 |
| **CA/NA** | 12 | 6 | 6 |
| **CK** | 42 | 42 | - |
| **C/HC** | 27 | 6 | 21 |
| **DC** | 70 | 2 | 68 |
| **MC** | 76 | 7 | 69 |
| **C/SC** | 3 | - | 3 |
| **C/CA** | 2 | - | 2 |
| **C** | 162 | 37 | 125 |
| **BCL** | 49 | 43 | 6 |
| **ARB** | 34 | 1 | 33 |
| **மொத்தம்** | 2088 | 2365 | 5783 |

## vi. சிறுவர் துஷ்பிரயோகப் வழக்குப் பிரிவு

சட்டமா அதிபரின் ஆலோசனைகளுக்காக அனுப்பப்பட்ட சிறுவர் துஷ்பிரயோக மற்றும் பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகள் தொடர்பான வழக்குகளை விரைவாக நிறைவேற்றுவதற்காக இவ்வலகானது 2004 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது.

சட்டமா அதிபர் திணைக்களமானது இவ்வழக்குகளைக் கையாள்வதற்கு 29 இளம் சட்டத்தரணிகளை நியமித்துள்ளது. அத்துடன் பதினான்கு துணையாதரவு பதவியினரும் உள்ளனர்.

2018 ஆம் ஆண்டு இவ்வலகானது பெரும் எண்ணிக்கையான வழக்குகளை கையாண்டுள்ளது. 2018 ஆம் ஆண்டில் 2717 கோவைகள் முடிவிக்கப்பட்டுள்ளன. அத்துடன் 16084 கோவைகள் நிறைவுசெய்யப்படாமல் எஞ்சியுள்ளன.

## vii. பொதுமக்கள் மனு அலகு

பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் மனுக்களுக்கு யாதேனும் நிவாரணம் வழங்கும் நோக்குடன் இம் மனுக்கள் இப்பிரிவுக்கு வழங்கப்படும். தற்போது இம்மனுக்களை கையாள்வதற்கு இத்திணைக்களத்தின் உதவி மன்றாடியார் அதிபதி ஒருவரில் கிழ் பணிகள் முன்னெடுக்கபடுகின்றன.

மேற்கூறப்பட்ட 2018 ஆம் ஆண்டில் ஒவ்வொரு பிரிவினதும் செயற்பாடுகளை பின்வருமாறு சுருக்கமாக நோக்கலாம்.

| கிளை | 2018 முன்னுக்கு கொண்டுவரப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை | திறக்கப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை | குற்றப்பகர்வுகள் அனுப்பப்பட்ட கோவைகள் எண்ணிக்கை | அறிவுறுத்தல் வழங்கப்பட்ட கோவைகள் எண்ணிக்கை | முடிவுறுத்தப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை | பணிகள் பூர்த்திசெய்யப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை | எஞ்சிய கோப்புக்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| * சிவில் பிரிவு | - | 2890 | - | 1490 | - | 612 | 452 |
| குற்றவியல் வழக்குப் பிரிவு | 14080 | 3425 | 2544 | 890 | 253 | 3717 | 13581 |
| *அரச சட்டத்தரணிகள் பிரிவு | 8534 | 2523 | - | - | - | 4137 | 6920 |
| உயர் நீதிமன்ற அலகு | 847 | 496 | - | - | - | 498 | 845 |
| கூட்டுத்தாபன பிரிவு | 6122 | 2088 | - | 268 | - | 2365 | 5783 |
| பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோக வழக்குப் பிரிவு | 17582 | 2057 | 1885 | 667 | 165 | 2717 | 16084 |
| பொது மக்கள் மனுப் பிரிவு | 619 | 672 | - | - | - | 823 | 468 |

*சிவில் பிரிவினால் திறக்கப்பட்ட கோவைகளின் பெரும் எண்ணிக்கையானவை அரச சட்டத்தரணிகள் பிரிவினால் கையாளப்படும்.

## viii. தாபனப் பிரிவு

தாபனப் பிரிவானது, திணைக்களத்தின் அனைத்து கடமைகளும் தடையின்றி நடைபெற திணைக்களரீதியாக மௌனமாக உதவி புரிகின்றது. இத்திணைக்களத்தின் ஏனையப் பிரிவுகள் போன்று இப்பிரிவினரின் செயற்பாட்டை அளவீட்டு முறையில் குறிப்பிட முடியாது. ஆகவே தாபனப் பிரிவின் 2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரையிலான காலப்பகுதியின் செயற்பாடுகள் பின்வருமாறு.

- **ஆட்சேர்ப்பு, வெற்றிடங்களை நிரப்புதல் மற்றும் புதிய பதவிகளை உருவாக்கல்.**

**சட்ட உத்தியோகத்தர்கள் :-**

- 2018.12.17 ஆம் திகதியன்றுஅரச சட்டவாதிகள் பதவிக்காக 49 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர்.

**பொது முகாமைத்துவ உதவியாளர்கள் சேவை :-**

- பொது முகாமைத்துவ உதவியாளர்கள் சேவைக்காக இறுதியாக மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்பின் போது சட்டமா அதிபர் திணைக்களத்திற்கென 49 புதிய உத்தியோகத்தர்கள் இணைப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

- அரசாங்க நூலகர் சேவையிலுள்ள 3 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மூன்று உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### திணைக்கள பதவிகள்

- திணைக்கள சுருக்கெழுத்தாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### கனிஷ்ட சேவை

- சாரதிகள் சேவையில் காணப்பட்ட 12 வெற்றிடங்கள் தொடர்பில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- அலுவலக உதவியாளர் சேவையில் காணப்பட்ட 110 வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள் பகுதி நேர மேற்பார்வை முன்மொழிளுக்கமைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- **விடுமுறையை கணணிமயப்படுத்தல்**

திணைக்களத்தின் அனைத்து அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் லீவானது பொருத்தமான ஆவணங்களின் பதியப்படுவதுடன் அதற்கு மேலதிகமான அனைத்து லீவுகளும் விசேடமாக வடிவமைக்கப்பட்ட கணனி மென்பொருளொன்றின் மூலமாக கணனி மயமாக்கப்பட்டுள்ளது. பதவி நிலை உத்தியோகத்தர்கர்கள் அவர்களது இணைய லீவு விண்ணப்பங்களை உரிய மேற்பார்வை உத்தியோகத்தர்களின் அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கலாம். (எழுத்து மூலமான அங்கீகாரம் தேவைப்படும் ஏனைய லீவுகள் மற்றும் வெளிநாட்டு லீவு தவிர்ந்தவை)

- **இடர் நிவாரணக் கடன் வழங்கல**

இடர் நிவாரணக் கடனுக்காக விண்ணப்பித்தவர்களை நீண்ட காலத்திற்கு காத்திருக்காது அதனை செலுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

2018.01.01 முதல் 2018.12.31 வரையான காலப்பகுதியில் இடர் நிவாரணக் கடனிற்கு விண்ணப்பித்த மற்றும் கடன் வழங்கப்பட்ட ஊழியர்கள் தொடர்பான தரவுகள் பின்வருமாறு.

| பதவி நிலை | விண்ணப்பங்களின் எண்ணிக்கை | கடன் வழங்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| பதவியணியினர் | 08 | 09 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை மற்றும் ஏனைய சேவைகள் | 52 | 65 |
| காரியாலய உதவியாளர் சேவை | 45 | 60 |
| சாரதிகள் | 37 | 38 |

❖ 2018 ஆம் ஆண்டின் காத்திருப்புப் பட்டியலில் உள்ளவர்களுக்கும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையால், கடன் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கையானது விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையினை விட அதிகமாகவுள்ளது

2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரை இடர் நிவாரணக் கடனுக்கு ரூபாய் 23,844,132/- அரச ஊழியர்களின் முற்பணக் கணக்கிலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

- **ஓய்வூதியக் கொடுப்பனவுகள்**

உத்தியோகத்தர் அல்லது ஊழியர் ஒருவர் ஓய்வு பெறும் சந்தர்ப்பத்தில் இத்திணைக்களத்தின் உத்தியோகத்தர் / ஊழியரின் ஓய்வூதியம் தொடர்பான அனைத்து ஆவணங்களும் அவரது ஓய்வூதியம் மற்றும்/ அல்லது பணிக்கொடையினை பெற்றுக் கொள்வதற்காக ஓய்வூதிய திணைக்களத்திற்கு எவ்வித காலதாமதமுமின்றி அனுப்பி வைக்கப்படும்.

அதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற 17 ஊழியர்களில் 16 ஊழியர்களின் ஓய்வூதியப் பணிக்கொடையானது குறித்த ஆண்டிலேயே கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

- **பயிற்சி மற்றும் பௌதீக வளங்களினை வழங்குவதனூடாக மனித வள மேம்பாடு**

- **வெளியக மூலவளங்கள் திணைக்களத்தினுடாக சட்ட உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டமை.**
- **அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை உத்தியோகத்தர்களினால் பயிற்சிகள் பெறப்பட்டமை.**
  - தேசிய சுவடிகள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட புத்தகம் கட்டும் பாடநெறியில் இரண்டு உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தனர்.
  - திறன் விருத்தி நிதியத்தினால் நடாத்தப்பட்ட சுயவிபரக் கோவை பேணுதல் பாடநெறியில் இரண்டு உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தனர்.
  - திறன் விருத்தி நிதியத்தினால் நடாத்தப்பட்ட லீவு லிகிதர்களின் தொழிற்பாடுகள் தொடர்பான பாடநெறியில் இரண்டு உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தனர்.
  - தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட அலுவலக முகாமைத்துவம் மற்றும் நிதிசார் ஒழுங்குவிதிகள் தொடர்பான பாடநெறியில் இரண்டு உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தனர்.
  - தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட பெறுகைகள் நடைமுறை தொடர்பான பாடநெறியில் இரண்டு உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தனர்.
  - மிலோதா நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட சம்பளக் கொடுப்பனவு தொடர்பான பாடநெறியில் மூன்று உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தனர்.
  - மொழிபெயர்ப்பு பாடநெறியில் (களனி பல்கலைக்கழகம்) உத்தியோகத்தர் ஒருவர் பங்குபற்றியிருந்தார்.
  - தேசிய விஞ்ஞான மன்றத்தினால் நடாத்தப்பட்ட டிஜிரல் நூலக பாடநெறியில் இரண்டு உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தனர்.
  - பொது நிருவாக அமைச்சினால் நடாத்தப்பட்ட நிதிசார் ஒழுங்குவிதிகள் தொடர்பான பாடநெறியில் நான்கு உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தனர்.
  - DCL நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட அரச துறை முகாமைத்துவம் தொடர்பான பாடநெறியில இரண்டு உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தனர்.
  - 2018 தமிழ் மொழிப் பாடநெறியில் ஏறக்குறைய 43 உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தனர்.

## ix. திட்டமிடல் பிரிவு

- **உள்ளக கட்டமைப்பு அபிவிருத்தி**

    - இத்திணைக்களத்திற்காக புதியதொரு கட்டிடமொன்று நிருமாணிக்கப்பட்டு வருகின்றமை –
        - 12 தளங்களைக் கொண்ட கட்டிட நிருமாணப் பணியானது நிறைவு பெற்றுள்ளது.
        - 11 தளங்களின் உள்ளகப் பகுதிப் பிரிப்பு நடவடிக்கைகள் நிறைவு பெற்றுள்ளன.
        - கூரை வேலைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
        - 80 சத வீதமான மின் இணைப்புக்கள் மற்றும் அலுமினியப் பொருத்து வேலைகள் நிறைவடைந்துள்ளன.

    - மன்னாரில் அரச சட்டவாதிகளுக்கான தங்குவிடுதிகள் –
        - 70 சதவீதமான கட்டமைப்பு வேலைகள் நிறைவு பெற்றுள்ளன.
        - கூரை வரையிலான சுவர்கள் கட்டியெழுப்பட்டுள்ளதுடன் எஞ்சியுள்ள வேலைகளுக்குத் தேவையான பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

    - வவுனியாவில் அரச சட்டவாதிகளுக்கான தங்குவிடுதிகள். –
        - மின் இணைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
        - மூலத் திட்டமிடலுக்கு அமைவாக மொத்த நிருமாணப் பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
        - பொலிஸ் பாதுகாப்பு அறை, சாரதிகளுக்கான அறை மற்றும் சமயலறை என்பனவற்றின் நிருமாணப் பணிகளினை பின்னர் மேற்கொள்ளலாமென தீர்மானிக்கப்பட்ட போதிலும் அப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
        - நிருமாண வேலைகளில் பௌதீக ரீதியாக 93 சதவீதமானவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
        - உள்ளக நிருமாண வேலைகளான குளியலறை பொருத்துக்கள் மற்றும் குளிரூட்டிகள் என்பன பொருத்தப்பட்டுள்ளன.

## XI. கணக்குகள் பிரிவு

**2018.01.01 இலிருந்து 2018.12.31 வரையிலான செலவின விபரணம்**

தலைப்பு 229 நிகழ்ச்சித்திட்டம் 01 கருத்திட்டம் 01

**2018.01.01 முதல் 2018.12.31 வரையிலான மீண்டுவரும் செலவினங்கள்**

| இலக்கு விபரங்கள் | வரவு செலவு திட்ட ஏற்பாடுகள் | தேறிய ஏற்பாடுகள் | உண்மைச் செலவினம் |
|---|---|---|---|
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 466,000,000 | 921,290,000 | 919,614,161 |
| ஏனைய மீண்டுவரும் செலவினங்கள் | 273,000,000 | 287,750,000 | 287,181,125 |
| மொத்தம் | **739000000** | **1209040000** | **1206795286** |

**2018.01.01 முதல் 2018.12.31 வரையிலான மூலதன செலவினம்**

| விடயமும் விடய இலக்கமும் | வரவு செலவு திட்ட ஏற்பாடுகள் | தேறிய ஏற்பாடுகள் | தேறிய செலவினம் |
|---|---|---|---|
| 2001 - கட்டிடமும் நிர்மாணமும் | 6000,000 | 7,500,000 | 7500,000 |
| 2002 - இயந்திரமும் இயந்திரத் தொகுதியும் | 2000,000 | 3800,000 | 3748,570 |
| 2003 - வாகனம் பழுது பார்த்தல் | 4500,000 | 6500,000 | 6500,000 |
| 2101 – வாகனக் கொள்வனவு | - | - | - |
| 2102 - தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 8000,000 | 6200,000 | 6,184,153 |
| 2103 - இயந்திரமும் இயந்திரத் தொகுதி கொள்வனவும் | 7000,000 | 3500,000 | 3500,000 |
| 2014 – நிருமாணங்கள் | 429000,000 | 399,000,000 | 317,236,171 |
| 2401 – செயற்குழுவினை பயிற்றுவித்தல் | 28000,000 | 58,000,000 | 57,515,940 |
| **மொத்தம்** | **484,500,000** | **484,500,000** | **402,184,835** |

**2018.01.01 முதல் 2018.12.31 வரையிலான முற்பணக் கணக்கு**

ரூபா.

| | ஆகக்கூடிய செலவின எல்லை | ஆகக்குறைந்த பெறுகைகளின் எல்லை | ஆகக்கூடிய வரவு மீதிகளின் எல்லை |
|---|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட எல்லை | 24,000,000 | 15,000,000 | 80,000,000 |
| உண்மையான | 28,801,743 | 27,884,321 | 49,927,849 |

**2018.01.01 முதல் 2018.12.31 வரையிலான வருமானக் கணக்கு**

**ரூபா.**

| வருமானக் கணக்கு | 2018 மதிப்பீடு | 2018 உண்மையான வருமானம் |
|---|---|---|
| 20.03.02.11 | 40,000,000 | 63,070,041 |